செ.வெ.எண். 43/பிப்ரவரி தேதி : 16.02.2017

# தருமபுரி மாவட்டம்
# எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் +2 பொதுத் தேர்வு முன்னேற்பாடு பணிக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.





தருமபுரி மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மார்ச்/ஏப்ரல் 2017-ல் நடைபெற உள்ள எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் +2 பொதுத் தேர்வுக்கான முன்னேற்பாடு பணிக்கூட்டம் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (16.02.2017) நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-

தருமபுரி மாவட்டத்தில் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு 74 மையங்களில் 23816 மாணவ, மாணவிகளும்மற்றும் பனிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வு 57 மைங்களில் 22605 மாணவ, மாணவிகளும் தேர்வு எழுத உள்ளார்கள். தேர்வு எழுத உள்ள மாணவ, மாணவிகளுக்கு தேவையான போக்குவரத்து மற்றும் தேர்வு மையத்தில் பிற வசதிகளை செய்து கொடுக்கவும், தேர்வு சிறப்பாகவும், நேர்மையாகவும் நடத்துவதற்கு துறை சார்ந்த அலுவலர்கள் நியமிக்க உள்ளார்கள். மேலும் தேர்வு மையங்களுக்கு தேர்வு தொடங்கும் நேரம் மற்றும் முடியும் நேரம் தேவையான அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அதேபோல் தேர்வு எழுத வரும் மாணவ, மாணவியர்களுக்கு போக்குவரத்துத் துறை சார்பில் தேர்வு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ள பள்ளிகளுக்கு பேருந்து நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தேர்வின்போது தடையில்லா மின்சாரம் வழங்கவும், தேர்வு மையங்களில் குடிநீர் மற்றும் பிற வசதிகள் செய்து தரவும்,மாவட்ட காவல் துறையின் மூலம் அனைத்து தேர்வு மையங்களுக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கவும், **வினாத்தாள் கட்டுகளை 24 மணி நேரமும் பாதுகாக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் மாவட்டத்தில் உள்ள ஜெராக்ஸ் கடைகள், கணினி மையங்களை கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

சுகாதாரத் துறையின் மூலம் தேர்வு எழுதும் மாணவ, மாணவிகளுக்கு ஏதேனும் அசௌகரிங்கள் ஏற்படின் உடனடியாக முதலுதவி அளிக்கத்தக்க வகையில் மருத்துவக் குழுக்கள் தயார் நிலையில் இருக்க வேண்டுமெனவும், இதேபோன்று தீயணைப்புத் துறை, உள்ளாட்சித் துறை அலுவலர்கள் தயார் நிலையில் இருப்பார்கள்.

**மேலும் எஸ்.எஸ்.எல்.சி. மற்றும் +2 பொதுத் தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்கள் மற்றும் தனியாக தேர்வு எழுதும் மாணவ, மாணவியர்கள் தேர்வு எழுதும் மையங்களில் கண்டிப்பாக கைபேசி (Cell) அனுமதியில்லை எனவும் மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.**

இக்கூட்டத்தில் சென்னை தொடக்கக் கல்வித்துறை இணை இயக்குநர் திருமதி. கே. சசிகலா, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திருமதி. கே.பி. மகேஸ்வரி, கோட்டாட்சியர்கள் திரு. இராமமூர்த்தி, திருமதி. கவிதா, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. இரா. சண்முகசுந்தரம், மாவட்டக் கல்வி அலுவலர் திரு. இராஜசேகரன், மாவட்டத்

தொடக்கக் கல்வி அலுவலர் திரு. பழனிசாமி, மாவட்ட காவல்துறை சார்பாக சி.ஐ.டி பிரிவில் உள்ள திரு. லெட்சுமணகுமார் மற்றும் துறை ரீதியான
அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தருமபுரி.